Namma Kalvi
www.nammakalvi.org

ஸ்ரீ வித்யபாரதி மெட்ரிக் மேல்நிலைப்பள்ளி
சக்கராம்பாளையம், அகரம்(அஞ்சல்), எலச்சிப்பாளையம்,
திருச்செங்கோடு(வட்டம்), நாமக்கல் (மாவட்டம்)-637 202.
அலைபேசி : 99655-31727, 94432-31727

# பத்தாம் வகுப்பு - தமிழ் முதல் தாள்

## அரையாண்டுப் பொதுத்தேர்வு டிசம்பர் - 2018

மொத்த மதிப்பெண்கள் : 100

## விடைக்குறிப்பு

பிரிவு – I மதிப்பெண்கள் : 20

| பகுதி – 1 | | 6x1=6 |
|---|---|---|
| உரிய விடையைத்தேர்ந்தெடுத்து எழுதுக | | |
| 1 | அ) கம்பர் | 1 |
| 2 | ஆ) பாரதிதாசன் | 1 |
| 3 | இ) சிலப்பதிகாரம் | 1 |
| 4 | இ) பெரியபுராணம் | 1 |
| 5 | அ) பாரதரத்னா | 1 |
| 6 | இ) திருவள்ளுவர் | 1 |

www.kalviexpress.in

| பகுதி – 2 | | 6x1=6 |
|---|---|---|
| கோடிட்ட இடத்தை நிரப்புக | | |
| 7 | சாலை இளந்திரையன் | 1 |
| 8 | கலித்தொகை | 1 |
| 9 | திருநாவுக்கரசர் | 1 |
| 10 | சிரவணபிதுர்பத்தி | 1 |
| 11 | வால்ட்டிஸ்னி | 1 |
| 12 | வடலூர் | 1 |

| பகுதி – 3 | | 4x1=4 |
|---|---|---|
| பொருத்துக | | |
| 13 | புயல் - மேகம் | 1 |
| 14 | கேசரி - சிங்கம் | 1 |
| 15 | பணை - மூங்கில் | 1 |
| 16 | அம்பி - படகு | 1 |

www.nammakalvi.org

| | பகுதி – 4 | 4x1=4 |
|---|---|---|
| | **விடைக்கேற்ற வினா அமைக்க(வினா சரியாக அமைந்திருப்பின் மதிப்பெண் வழங்கவும்)** | |
| 17 | உலக இலக்கியங்களுள் முதன்மை பெற்றுள்ள இலக்கியங்கள் எவை? | 1 |
| 18 | திரையரங்குகளில் திரைப்படம் காட்ட எப்படக்கருவி பயன்படுகிறது? | 1 |
| 19 | ‘உடம்பார் அழியின் உயிரார் அழிவர்’ என்று கூறியவர் யார்? | 1 |
| 20 | குமரிக்கண்டத்தில் தோன்றிய முதல் மனிதன் பேசிய மொழி எது? | 1 |

**பிரிவு – II** **மதிப்பெண்கள் : 20**

| | பகுதி – 1 | 5x2=10 |
|---|---|---|
| | **எவையேனும் ஐந்தனுக்கு மட்டும்** | |
| 21 | • உலகம் முழுவதையும் ஆளக் கருதுபவர்,<br>• அதற்குரிய காலத்தை எதிர்பார்த்துக் கலங்காமல் காத்திருப்பர். | 1<br>1 |
| 22 | • நம் பாடப்பகுதியில் ஏலாதிப்பாடல் ஐம்பத்தொன்பதாவது (59) பாடலாக அமைந்துள்ளது. | 2 |
| 23 | • குகன் கையுறைப் பொருள்களாகக் கொண்டு சென்றவை **தேனும், மீனும்** ஆகும்.<br>• அதை **இராமனுக்குக்** கொண்டு சென்றான். | ½<br>½<br>1 |
| 24 | ♦ “களவு, பொய், காமம், கோபம் முதலிய குற்றங்களை நீக்கி வாழ்ந்தார்.<br>(அப்பூதியடிகள் குற்றமற்றவர், வளமிகு இல்லற வாழ்வினர். சிவபக்தி மிக்கவர். திருநாவுக்கரசரிடம் பேரன்புடையவர்) | 2 |
| 25 | • அரசுரிமையால் வந்த பொருள்<br>• மக்கள் வரியாகத் தரும் பொருள்<br>• பகைவரை வென்று கொண்ட திறைப்பொருள் ஆகிய மூன்றும் வேந்தனுக்குரிய பொருளாகும். | 2 |
| 26 | ♦ வயலின் வரப்புகளாகக் கூறப்படுபவை நால்வகைப் பாக்களாகும். அவை,<br>♦ வெண்பா<br>♦ ஆசிரியப்பா<br>♦ வஞ்சிப்பா<br>• கலிப்பா | <br>½<br>½<br>½<br>½ |
| 27 | • நந்திக்கலம்பகம் பல்லவமன்னன் மூன்றாம் நந்திவர்மன் மீது பாடப்பெற்றது. | 2 |

www.kalviexpress.in

| பகுதி - 2 | | |
|---|---|---|
| எவையேனும் ஐந்தனுக்கு மட்டும் | | **5x2=10** |
| 28 | • இயல், இசை, நாடகம் என்னும் முப்பெரும் பிரிவுகளைக் கொண்டது தமிழ்மொழி. அதனால் தமிழ் முத்தமிழ் எனப் போற்றப்படுகிறது. | 2 |
| 29 | ♦ ஒரு நிகழ்வை மட்டும் எடுத்துக்கொண்டு, அதைப்பற்றிய முழு விளக்கத்தினையும் தருவது விளக்கப்படமாகும்.<br>♦ எடுத்துக்காட்டாக, உலகத்தமிழ் மாநாட்டு நிகழ்வை மட்டும் காட்டும் படம் விளக்கப்படம் எனப்படும். | 1<br>1 |
| 30 | ♦ பட்டினப்பாலை<br>♦ மதுரைக்காஞ்சி | 1<br>1 |
| 31 | • நிலத்தில் இருந்து நீரை உறிஞ்சி இறைக்கும் ஆழ்துளைக் கிணறு, அக்காலத்தில் இருந்திருக்கலாம் என்பதனை, 'அந்தக் கேணியும் எந்திரக் கிணறும்' என்னும் பெருங்கதை வரிகள் வாயிலாக அறியமுடிகிறது. | 2 |
| 32 | ♦ அன்பு,<br>♦ உண்மை,<br>♦ உறுதி,<br>♦ இன்னா செய்யாமை | ½<br>½<br>½<br>½ |
| 33 | ♦ வீடுதோறும் இரந்தும் பசியறாது அயர்ந்தவரையும், நீடியபிணியால் வருந்துவோரையும், ஈடில் மானிகளாய், ஏழைகளாய் நெஞ்சு இளைத்தோரையும் கண்டு வருத்தத்தால் உயிர் இளைத்தார் வள்ளற்பெருமான்.<br>♦ இவ்வருத்தம் நீங்கவே வடலூரில் சத்திய தருமச்சாலையை நிறுவிச் சாதி, மத வேறுபாடின்றிப் பசித்தோர்க்கெல்லாம் உணவிட்டார்.<br>♦ அங்கு அவர் ஏற்றி வைத்த அடுப்பின் கனல், இன்றும் பல்லோர் பசிப்பிணியைப் போக்கி வருகின்றது. | 1<br>1 |
| 34 | ♦ மருத்துவம்,<br>♦ பொறியியல்,<br>♦ வேளாண்மை,<br>♦ சட்டம் முதலியவை தொழிற்கல்வித் துறைகள். | ½<br>½<br>½<br>½ |

www.kalviexpress.in

பிரிவு – III                    மதிப்பெண்கள் : 24

| பகுதி – 1 | | |
|---|---|---|
| எவையேனும் மூன்றனுக்கு மட்டும் | | 3x4=12 |
| 35 | **தமிழ்வளர்ச்சி பாடலில் பாரதிதாசன் கூறியுள்ள கருத்துகள்:**<br>♦ தமிழ் நூல்களை எளிய நடையில் எழுதுதல் வேண்டும்<br>♦ இலக்கண நூல்களைப் புதிதாகப் படைத்தல் வேண்டும்<br>♦ உலகின் புதிய ஆய்வுச் சிந்தனைகளைத் தமிழ்ப்படுத்தி, விளக்கப் படங்களுடன் நூல்களாக்கிச் செந்தமிழைச் செழுந்தமிழாய்ச் செய்தல் வேண்டும்.<br>♦ வறுமையினால் தமிழன் ஒருவன் கல்லாத நிலை ஏற்படுமானால் இங்குள்ளோர் நாணம் அடைதல் வேண்டும். | 1<br>1<br>1<br>1<br>1 |
| 36 | **தலைவனுக்குத் தோழி கூறும் செய்திகள்:**<br>♦ உழவர்கள் நெற்கதிர்களை அறுவடை செய்த பின்னர், அகன்ற வயலினை மீண்டும் பயிர் செய்ய உழுதனர். பனையோலைப் பெட்டியில் கொண்டு சென்ற விதையை ஈரமுள்ள நிலங்களில் விதைத்து விட்டு, அப்பெட்டியில் வயல்வெளியில் உள்ள மீன்களைப் பிடித்து போட்டு வரும் மருத நிலத் தலைவனே.<br>♦ அரசரால் சிறப்புச் செய்யப் பெறுதல் செல்வமன்று. யானை, தேர், குதிரை முதலிய ஊர்திகளில் விரைந்து செல்லுதலும் செல்வமன்று. அஃது முன்வினைப்பயன்.<br>♦ தன்னிடம் அடைக்கலமாக வந்த எளியோரைக் கைவிடாமல் காக்கும் பண்பே செல்வமென்று சான்றோர் கூறுவர்.<br>♦ ஆனால், நீ தஞ்சமென வந்த தலைவியைக் கைவிட்டுக் கூடா ஒழுக்கத்தினை மேற்கொண்டது முறையா?" என்று தலைவனிடம் தோழி கேட்கிறாள். | 2<br>1<br>1 |
| 37 | **விருத்தமாதவரை நோக்கி இராமன் கூறியவை:**<br>♦ குகன் தான் கொண்டுவந்த தேனையும் மீனையும் ஏற்குமாறு வேண்டினான்.<br>♦ அப்போது, இராமபிரான் தன் அருகிலிருந்த முனிவர்களை நோக்கிப் புன்முறுவல் செய்தார்.<br>♦ உள்ளத்து அன்பு முதிர்வினால் எழுந்த பரிவின் காரணமாகக் குகன் கொண்டுவந்த பொருள்கள் கிடைத்தற்கரியன.<br>♦ இவை எளியனவாயினும் தேவாமுதத்தைக் காட்டிலும் சிறந்தனவாம்.<br>♦ இவை தாழ்ந்தன வாயினும் அன்பு கலந்தனவாதலால் தூயனவே.<br>♦ ஆகையால் இனிமையான இவை எம் போன்றவர் ஏற்றுக்கொள்ளுதற்கு உரியனவே. நாம் ஏற்றுக்கொண்டதே உண்டதற்குச் சமமாகும்" என்று அன்புடன் கூறினார். | ½<br>½<br>1<br>½<br>½<br>1 |

www.kalvikexpress.in
ஸ்ரீ வித்யபாரதி

| | | |
|---|---|---|
| 38 | **சாதனைப்பூக்களாக சாலை இளந்திரையன் கூறுவது:**<br>♦ வாழ்க்கையாகிய வழித்தடம் குப்பைக் கூளங்களால் அடைபடும் முன் நீ நேர்வழியில் துளியும் சோர்வில்லாமல் விரைந்து செல்லுதல் வேண்டும்.கல்லும், முள்ளும் உள்ள மலைப்பகுதியைக் கடப்பதற்கு இரண்டு கால்களை உடையவன் நீ. நடக்கும் பாதையில் வளரும் புதர்களை அழிப்பதற்கும் உனக்கு இருகைகள் உள்ளன.<br>♦ செல்லும் வழியில் முன்னேறிச் செல்வதற்குக் கண்களும் காதுகளும் துணையாக உள்ளன. இவற்றுடன் மனஉறுதியும் இருந்தால் விண்ணையும் கடந்து வெற்றிக்கொள்ளும் வழியைக் காணலாம். ஓய்வு எதற்கு?<br>♦ இன்று ஓய்வெடுத்து நாளை செல்லலாம் என்று எண்ணினால் ஓர் இரவுக்குள் என்னென்ன நேருமோ? பணியை முடித்து ஓய்வு பெறுக தம்பி, இனிக்கும் செய்திகள் உன் மனதில் வந்து குவியும்.<br>♦ செடிகள் பூப்பதற்கு முன் ஓய்வெடுப்பதில்லை. செடியின் வெற்றி பூவில் உள்ளத்தைப் போல், நமது வெற்றிகளால் துன்பங்கள் ஓடிவிடும். | 1<br><br>1<br><br>1<br><br>1 |
| 39 | **முகமது நபி வருவதைக் கண்ட புலியின் நிலை:**<br>♦ மலைகளில் வாழும் சிங்கத்திற்கு ஒப்பாகிய நபிமுகம்மது, தமது மலைபோன்ற தோள்கள் அசையும்படி வந்தார்.<br>♦ அவருடைய வலக்கையில் ஒளிவிடும் வேற்படையினை அழகுடன் ஏந்தியிருந்தார். பாதையில் மகிழ்ச்சியுடன் அவர் நடந்து வருவதை புலியானது பார்த்தது.<br>♦ அவரை கூர்மையான நகத்தினையும் திண்ணிய வலிமையும் கொண்ட அப்புலி தன் வாலை வளைத்தது.தன் பெரிய தலையைத் தாழ்த்தியது; அரிய உடல் நடுக்கமுற்றது.<br>♦ மெல்ல மெல்ல நடந்து, நபிக்கு எதிராய் வந்து, “குளிர்ச்சி தங்கிய தளிர் போன்ற உங்கள் திருவடிக் காட்சி கிடைத்தது” என்று தலையைத் தாழ்த்திப் பணிந்து வணங்கியது. | 1<br><br>1<br><br>1<br><br>1 |

| | | |
|---|---|---|
| | **பகுதி – 2** | |
| | **எவையேனும் மூன்றனுக்கு மட்டும்** | **3x4=12** |
| 40 | ♦ பெண்கள் முன்னேற்றத்திற்குப் பெருந்தடை, வீட்டில் அவர்களை முடக்கி வைத்ததே. இது நாட்டு நடப்பை அறியவிடாமல் அவர்களின் அறிவை மறைக்கச் செய்வதாகும்.<br>♦ நமது சமுதாயத்தில் பெண்கள் சார்ந்த தலைகீழான ஒரு புரட்சி ஏற்பட்டாலொழிய பெரிய மாறுதல்களைக் கொண்டு வரவியலா.<br>♦ ஆண்கள் பெண்களைப் படிக்க வைக்க வேண்டும். உலகப் படிப்பும், ஆராய்ச்சிப் படிப்பும் தாராளமாய்க் கொடுக்க வேண்டும் | 1<br><br>1<br><br>1 |

www.kalviexpress.in
ஸ்ரீ வித்யபாரதி

www.nammakalvi.org

| | | |
|---|---|---|
| | ♦ நாட்டிலுள்ள பெருங்கேடு, பெண்களைப் பகுத்தறிவற்ற சீவன்களாய் வைத்திருக்கும் இழிநிலையாகும். இது ஒழிக்கப்பட வேண்டும்<br>♦ பெண்கள் கல்வி கற்றாலொழிய சமூக மாற்றம் ஏற்படாது. | ½<br>½ |
| 41 | ♦ அறியாமை தான் அனைத்திற்கும் மூலகாரணம் என்பதை அம்பேத்கர் நன்குணர்ந்தார். எனவே ஒவ்வொருவரும் முழுமனித நிலையை அடைய கல்வி, செல்வம், உழைப்பு ஆகிய மூன்றும் தேவைப்படுகிறது.<br>♦ செல்வமும் உழைப்பும் இல்லாத கல்வி களர்நிலம், உழைப்பும் கல்வியும் அற்ற செல்வம் மிருகத்தனம் என்றார். கற்பித்தல் அறிவியல் முறைக்கு உகந்ததாக இருக்கவேண்டும். கல்வி மாணவர்களது ஊக்கத்தைத் தூண்டுவதுடன் தனித்தன்மையை வெளிக்கொணர்வதாகவும் அமைய வேண்டும் என்று அண்ணல் அம்பேத்கர் குறிப்பிடுகிறார்.<br>♦ அம்பேத்கர் 1946 ஆம் ஆண்டு மக்கள் கல்விக் கழகத்தைத் தோற்றுவித்தார்.<br>♦ மும்பையில் இவரின் அரிய முயற்சியால் உருவான சித்தார்த்தா உயர்கல்வி நிலையத்தில் இன்றைய அறிவு வளர்ச்சிக்கு வேண்டிய அனைத்துப்பாடங்களும் கற்பிக்கப்படுகின்றன. | 1<br>1<br>1<br>1 |
| 42 | பேச்சு, மேடைப்பேச்சு வேறுபாடு : | 2<br>2 |
| 43 | **கடல் வாணிகத்தில் தமிழர்:**<br>♦ கடல் வாணிகத்தில் தமிழர் சிறந்திருந்தனர்; பொன்னும் துகிலும் மணியும் முத்தும் கொண்டு கடல் கடந்து வாணிகம் செய்தனர்.<br>♦ பண்டைய தமிழகத்தில் துறைமுகப் பட்டினங்கள் பலவிருந்தன. பூம்புகார் முதலான பெருநகரங்கள் வணிகர் வாழும் இடங்களாய் இருந்தன.<br>♦ கிறித்து பிறப்பதற்கு முன்பே கிரேக்கம், உரோமபுரி, எகிப்து ஆகிய நாடுகளுக்கு அரிசியும் மயில்தோகையும் சந்தனமும் தமிழகத்திலிருந்து அனுப்பப்பட்டன.<br>♦ கி.மு. பத்தாம் நூற்றாண்டில் அரசன் சாலமனுக்கு யானைத் தந்தமும் மயில்தோகையும் வாசனைப் பொருட்களும் தமிழகத்திலிருந்து அனுப்பப்பட்டன. தமிழர்களுக்குச் சாவக நாட்டுடனும் கடல் வாணிகத் தொடர்பு இருந்தது. | 1<br>1<br>1<br>1 |

Table for 42:

| பேச்சு | மேடைப்பேச்சு |
|---|---|
| உணர்ந்ததை உணர்ந்தவாறு தெரிவித்தால் போதுமானது | உணர்ந்ததை உணர்த்தும் வகையில் தெரிவிக்க வேண்டும். |
| கேட்கின்றவனைக் கேட்கின்றவனாகவே மதிக்கலாம். | கேட்கின்றவனை மதிப்பிடுவோனாக மதித்தல் வேண்டும். |

www.kalviexpress.in

| | | |
|---|---|---|
| 44 | **நல்ல சமுதாயமாக மாற காந்தியகள் கூறுவன:**<br>♦ என்னைப் பொறுத்தவரை தேசாபிமானமும், மனிதாபிமானமும் ஒன்றுதான். நான் ஒரு தேசபக்தன், அதற்குக் காரணம் நான் மனிதனாக இருப்பதும் அறத்கு மேல் மனிதாபிமானியாக இருப்பதும் தான்.<br>♦ மனிதன் மொழியாலும் நாட்டாலும் உணர்த்தப்படுவதைக் காட்டிலும் மனிதத் தன்மையால் உணர்த்தப் பெறுவதே சிறப்பு<br>♦ நான் குஜராத்தியனாக, இந்தியனாக இருப்பதைக் காட்டிலும், மனிதனாக இருப்பதே பெருமைக்குரியது என எண்ணினார்.<br>♦ இவ்வாறு "உலகோர் அனைவரும் குறிக்கோளுடைய மனிதராக இருந்தால், உலகமே ஒரு நல்ல சமுதாயமாக உருவாகும்" என்றார் காந்தியடிகள். | 1<br>1<br>1<br>1 |

**பிரிவு – IV மதிப்பெண்கள் : 10**

| | | |
|---|---|---|
| **கீழ்க்காணும் பாடலைப் படித்து வினாக்களுக்கு விடையளிக்க** | | **5x1=5** |
| 45 | i) பிள்ளைப்பாண்டியர்(அ) அதிவீரராம பாண்டியர், வில்லிபுத்தூரார், ஒட்டக்கூத்தர்<br>ii) இரண்டாம் வேற்றுமைத் தொகை<br>iii) கீழானவர் (அ) போலிப்புலவர்<br>iv) பாத்தனதாக்-கூத்தனிவர், குட்டி-வெட்டி<br>v) தமிழ்விடு தூது | 1<br>1<br>1<br>1<br>1 |
| 46 | **கீழுக்காணும் உரைப்பகுதியைப் படித்து வினாக்களுக்கு விடையளிக்க** | **5x1=5** |
| | i) தமிழர் உணவு, உடை, விருந்து, ஈகை, பொறை நடுவுநிலைமை, அருள் ஆகிய பண்புகளால் சிறந்திருந்தனர்.<br>ii) சான்றோனாதலே கல்வியின் முடிவெனப் போற்றினர்.<br>iii) புகழெனில் உயிரும் கொடுக்க முனைந்தனர். பழியெனில் உலகைப்பெறவும் மறுத்தனர்.<br>ஈ) தமிழினம் தனக்குவமையில்லா ஒரு தனி இனம். தமிழர் நாகரிகம் தன்னிகரில்லா நனிநாகரிகம். தமிழர் உணவு, உடை, விருந்து, ஈகை, பொறை நடுவுநிலைமை, அருள் ஆகிய பண்புகளால் சிறந்திருந்தனர்.<br>உ)வினையை ஆடவர் உயிராகக் கருதினர். | 1<br>1<br>1<br>1<br>1 |

www.kalviexpress.in

**பிரிவு – V** **மதிப்பெண்கள் : 26**

| பகுதி - 1 | | |
|---|---|---|
| **எவையேனும் ஒன்றனுக்கு மட்டும்** | | **2x8=16** |
| 47 | **அ) பொருளை ஆக்குவதற்கும் காப்பதற்குமான செயல்முறைகள்:**<br>**பொருளின் சிறப்பு:**<br>❖ ஒரு பொருட்டாக மதிக்கத்தகாதவரையும் பிறர் மதிக்குமாறு செய்வதில் பொருளுக்கு இணையானது வேறொன்றுமில்லை.<br>❖ செல்லவம் அற்றவரை எல்லாரும் இகழ்வர்; செல்வரை எல்லாம் சிறப்பிப்பர்.<br>❖ செல்வம் என்னும் அணையா விளக்கு, அதனை உடையவர் நினைத்த இடங்களுக்கெல்லாம் சென்று பகைமை என்னும் இருளைப் போக்கும்.<br>**பொருளீட்டும் நெறி :**<br>❖ பிறருக்குத்தீங்கின்றி நல்வழியில் ஈட்டிய பொருள், அறத்தினையும் கொடுக்கும், இன்பத்தினையும் தரும்.<br>❖ அருளும் அன்பும் பொருந்தாமல் பிறவழியில் வரும் செல்வத்தினைப் பற்றாமல் நீக்குதல் வேண்டும்.<br>❖ அரசுரிமையால் வந்த பொருளும் மக்கள் வரியாகத் தரும் பொருளும், பகைவரை வென்றுகொண்ட திறைப்பொருளும் அரசனுக்குரிய பொருள்களாம்.<br>**பொருளின் பயன்:**<br>❖ அன்பு என்னும் தாய் பெற்ற அருள் என்னும் குழந்தை, பொருள் என்னும் வளர்ப்புத் தாயால் பேணப்படும்.<br>❖ தன் கைப்பொருள்கொண்டு ஒருவன் செய்யும் செயலானது குன்றின்மேல் இருந்துகொண்டு யானைப்போரைக் காண்பதற்கு ஒப்பானது.<br>❖ பொருளைத் தேடிச் சேர்த்தல் வேண்டும். அது பகைவரின்செருக்கை அறுக்கும் உறுதியான படைக்கலம். அதனைவிடக் கூர்மையான கருவி வேறொன்றுமில்லை.<br>❖ சிறந்த பொருளை நல்வழியில் மிகுதியாக ஈட்டியவர்க்கு, மற்றைய அறனும் இன்பமும் ஆகிய இரண்டும் ஒருசேரக் கைகூடும் எளிய பொருள்களே. | 8 |
| 47 | **ஆ) கண்ணகிக்கும் பாண்டிய மன்னன் நெடுஞ்செழியனுக்கும் நடந்த சொற்போர் :**<br>**பாண்டியன் :** நீர்வார் கண்ணை எம்முன் வந்தோய்<br>யாரையோ நீ மடக் கொடியோய்? - இளமையான கொடி போன்றவளே! நீரொழுகும் கண்களுடன் எம்முன் வந்து நிற்கும் நீ, யார்?<br>**கண்ணகி :** தேரா மன்னா செப்புவ துடையேன் - ஆராய்ந்து அறிந்து நீதி வழங்காத மன்னனே! உன்னிடம் கூறுவது ஒன்றுண்டு<br>புறாவின் துன்பதைப் போக்கிய சிபி மன்னனும்! தன் அரண்மனை மணி ஒலித்ததைக் கேட்டுப் பசுவின் துயரை அறிந்து, தன் ஒப்பற்ற மகனையே தேர்ச்சக்கரத்திலிட்டுக் கொன்ற மனுநீதிச் சோழனும் வாழ்ந்த பெரும் புகழுடைய புகார் நகரமே யான் பிறந்த ஊர். | 8 |

www.kalviexpress.in

www.nammakalvi.org

| | | |
|---|---|---|
| | அப்புகார் நகரில் பழியில்லாத சிறப்பினையுடைய புகழ்மிக்க குடியில் தோன்றிய மாசாத்துவான் மகனை மணம் புரிந்தேன். வீரக்கழலணிந்த மன்னனே! ஊழ்வினைப் பயனால், வாழ்வதற்காக நின் மதுரை நகரத்துக்கு வந்து என் காற்சிலம்பினை விற்க முயன்று, உன்னால் கொலை செய்யப்பட்ட கோவலன் மனைவி நான் கண்ணகி என்பது என் பெயர்.<br>**பாண்டியன்** : கள்வனைக் கோறல் கடுங்கோலன்று<br>வெள்வேற் கொற்றங்காண்<br>கள்வனைக் கொலை செய்தல் கொடுங்கோலன்று அதுவே அரச நீதி<br>**கண்ணகி** : அறநெறியில் செல்லாத அரசனே! என் காற்சிலம்பு மாணிக்கப் பரல்களைக் கொண்டது.<br>**பாண்டியன்** : நீ கூறியது நல்லதே! எம்முடைய சிலம்பின் பரல்கள் முத்துக்களே! காவலனே! அக்கள்வனிடம் கைப்பற்றிய சிலம்பைக் கொண்டு வருக.<br>பாண்டியன் சிலம்பை வாங்கி தன் அவையில் கண்ணகி முன் வைத்தான். கண்ணகி சீற்றத்தோடு அச்சிலம்பை எடுத்துத் தரையில் ஓங்கி எறிந்தாள். சிலம்பு உடைந்து சிதறிய மாணிக்கப்பரல்கள்; மன்னனின் முகத்தில் தெறித்து விழுந்தன.<br>**பாண்டியன்** : பொற்கொல்லனின் சொல்கேட்டு ஆராயாமல் தீர்ப்பு வழங்கிய யானோ அரசன்? யானே கள்வன்!<br>கோவலன் கள்வன் அல்லன். அவனைக் கள்வன் என்று கொன்ற என்னால், என் குடிப்பெருமை அழிந்தது! என் ஆயுள் கெடுவதாக!<br>(மயங்கி விழுந்து பாண்டிய மன்னன் உயிர் விடுகிறான்) | |
| 48 | **அ) செம்மொழிக்குரிய தகுதிப்பாடுகள்:**<br>❖ தொன்மை<br>➢ முதல் மாந்தன் பேசிய மொழி தமிழ்மொழியே, முதல், இடைத் தமிழ்ச்சங்கங்கள் குமரியிலும், மூன்றாவது தமிழ்ச்சங்கம் தென்மதுரையிலும் நடத்தப்பட்டது.<br>➢ மூவாயிரம் ஆண்டுகளுக்கு முன் தோன்றிய தமிழின் தொன்மை கருதி என்று முள தென்தமிழ் என்கிறார் கம்பர்.<br>❖ பிறமொழித் தாக்கமின்மை<br>➢ காலச்சூழலால் ஆங்கிலம், வடமொழி, தமிழ் போன்றவற்றில் பிறமொழிச் சொற்கள் கலந்துள்ளன.<br>➢ பிறமொழிச் சொற்களை நீக்கினால் பலமொழிகள் இயங்கா.ஆனால் தமிழ் ஒன்றே பிறமொழிச் சொற்களை நீக்கினாலும் இயங்க வல்லது. எண்ணற்ற வேர்ச்சொற்களைக் கொண்டு புதுக் கலைச்சொற்களை உருவாக்குவல்லது.<br>❖ தாய்மை<br>➢ ஆயிரத்தெண்ணூறு மொழிகளுக்கு வேர்ச்சொற்களையும், நூற்றெண்பது மொழிகளுக்கு உறவுப் பெயர்களையும் தந்து உலகமொழிக்கெல்லாம் தாயாகத் திகழ்கிறது தமிழ். | 8 |

www.kalviexpress.in

- தனித்தன்மை
  - முத்தமிழ்க் காப்பியமாகவும், அகம், புறம் என்று வாழ்வியலுக்கு இலக்கணம் வகுத்ததும், ஒப்பற்ற வாழ்வியல் நெறியான திருக்குறள் தந்ததும், இறவாத இலக்கிய இலக்கண வளம் கொண்டு நிற்பதும் தமிழ்மொழியின் தனித்தன்மையாகும்.
- இலக்கிய வளம், இலக்கணச் சிறப்பு
  - சங்க இலக்கியங்களின் தனிச்சிறப்பு உலகில் வேறு எம்மொழியிலும் இல்லை.
  - தமிழே பண்பட்ட மொழி, இலக்கியச் செல்வ மொழி, வாழ்வியல் நெறிகளைக் கூறும், மொழியாகும்.
  - தமிழ்மொழி இலக்கணத்தின் நுண்மை, இனிமை, வளமை, பழைமை, ஐந்திலக்கணத்தன்மை போற்றுதற்குரியது.
- பொதுமைப் பண்பு
  - தமிழர் பிறர்க்கென வாழ்பவர். ஒன்றே குலம் எனப் போற்றியவர். தீதும் நன்றும் அவரவர் செயலால் என்றுணர்ந்தவர்.
  - செம்புலப்பெயல்நீர் போல் அன்புள்ளம் கெண்டவர். இவ்வாறான பொதுமை அறம் தமிழ் இலக்கியங்களால் போற்றப்பட்டது.
- நடுவுநிலைமை
  - சங்க இலக்கியங்கள் இனம், மொழி, மதம் கடந்து இயற்கையோடு இயைந்து உலகத்தார் ஏற்கும் பொதுக்கருத்துகள் உடையனவாய்த் திகழ்கின்றன.
- பண்பாடு, கலை பட்டறிவு வெளிப்பாடு
  - சங்கப் படைப்புகள் கற்பனைப் படைப்புகளல்ல, மனிதப் பட்டறிவின் முழு வெளிப்பாடுகள்.
  - அறிவுடன்பொருந்தி, அறத்தொடு நின்று, பகுத்துண்டு பல்லுயிர் ஓம்பி, யான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம் என்று கூறி பிறன்மனை நோக்காப் பேராண்மை நெறியைக் கூறிப் பண்பாட்டு நெறிமுறைகளை வெளிப்படுத்துகின்றன.
- உயர்சிந்தனை
  - யாதும் ஊரே யாவரும் கேளிர் - புறநானூறு
  - பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் - திருக்குறள்
  - மக்கட் பண்பில்லாதவர் மரம் போன்றவர் - திருக்குறள்
- கலை இலக்கியத் தனித்தன்மை வெளிப்பாடு
  - முத்தமிழாய்த் தமிழை வளம் பெறச் செய்தனர்.
  - எளிய குடிமக்களைக் காப்பியத் தலைவர்களாக்கி காப்பியம் படைத்தனர் - சிலப்பதிகாரம்
  - அரசியல் பிழைத்தோர்க்கு அறம் கூற்றாகும் என்னும் அறநெறியை உலகாள்வோர்க்குச் சிலம்பு உணர்த்துகிறது.
- மொழிக் கோட்பாடு
  - தொல்காப்பியம் கூறும் எழுத்துப் பிறப்பு முறைகள் மொழி நூலாரையே வியப்பில் ஆழ்த்துகிறது.
  - எக்காலத்திற்கும் பொருந்தும் மொழியியல் கோட்பாடுகளை வகுத்த தமிழர் தம் மொழித்திறம்

www.kalviexpress.in
ஸ்ரீ வித்யபாரதி - தமிழ்

| | | |
|---|---|---|
| | ஆராயத்தக்கது.<br>➢ உலக உணர்வுகளை வெளிப்படுத்த 500 ஒலிகளைக் கொண்டுள்ளது.<br>➢ காலப்புதுமை, கணினிப் பயன்பாட்டிற்கும் ஏற்றதாகத் தமிழ் உள்ளது.<br>(எவையேனும் எட்டிற்கு விளக்கமளித்திருந்தால் மதிப்பெண் வழங்கலாம்) | |
| 48 | **ஆ) கனிமவியல் அறிவு :**<br>❖ சிலப்பதிகாரம் பல்வகை மணிகளையும், அதன் தன்மைகளையும் விளக்குகிறது.<br>'ஒருமைத் தோற்றத்து ஐவேறு வனப்பின்<br>இலங்குகதிர் விடுஉம் நலங்கெழு மணிகளும்'<br>என்னும் சிலப்பத்திகார 'ஊர்காண் காதை' அடிகள் பண்டைத் தமிழரின் கனிமவியல் அறிவைத் தெளிவாக்குகிறது.<br>❖ மேலும் ஐவகை மணிகளும் ஒளிவிடும் நிறத்தினால் வெவ்வேறு பெயர்களைக் கொண்டுள்ளன. ஆனால், அவற்றின் மூலப்பொருள் ஒன்றே எனக் குறிப்பிடுகிறது.<br>❖ இவ்வறிவியல் சிந்தனை, தற்போதைய வேதியியல் கூறுகளுடன் ஒப்புநோக்கத்தக்கதாகும்.<br>**மண்ணியல் அறிவு:**<br>❖ தமிழர், தம் வாழிடங்களை நிலத்தின் தன்மைக்கேற்ப ஐவகை நிலங்களாக பாகுபடுத்தியுள்ளனர்.<br>❖ மேலும் நிறத்தின் அடிப்படையில் செம்மண் நிலம் எனவும், தன்மையின் அடிப்படையில் களர்நிலம் எனவும், சுவையின் அடிப்படையில் 'உவர்நிலம்' எனவும் நிலத்தைத் தமிழர் வகைப்படுத்தினர்.<br>❖ 'செம்புலப் பெயர் நீர்போல' என்னும் குறுந்தொகை வரி செம்மண் நிலத்தையும், 'உறுமிடத் துதவா உவர்நிலம்' என்னும் புறநானூற்று வரி உவர்மண் நிலத்தையும் 'பயவாக் களரனையர் கல்லாதவர்' என்னும் திருக்குறள் வரி களர்நிலத்தையும் எடுத்துக்கூறுகின்றன.<br>**அணுவியல் அறிவு:**<br>❖ இன்றைய அறிவியல், அணுவைப் பிளக்கவும், சேர்க்கவும் முடியும் என ஆய்ந்திருக்கிறது.<br>❖ அணுவைத் துளைத்து ஏழ்கடலைப் புகட்டி' என்று ஔவையார் அணுப்பிரிப்பைப் பற்றி பாடியுள்ளார்.<br>❖ 'ஓர் அணுவினைச் சதக்கூறிடட் கோணினும் உளனம்' எனக் கம்பர் கூறியுள்ளார்.<br>❖ இதன் மூலம் அணுச்சேர்ப்பும் அணுப்பிரிப்பும் பற்றிய கருத்துக்கள் அன்றே இருந்துள்ளது என்பதை அறியலாம்.<br>**நீரியல் அறிவு:**<br>❖ நீர், மழையாய் மண்ணிற்கு வருவதும் ஆவியாகி விண்ணிற்குச் செல்வதும் நீர்ச்சுழற்சி இயக்கம் எனப்படும். இவ்வியக்கம் இல்லையெனில் மழை வளம் குன்றும்; வெப்பநிலை மிகும்; தட்பவெப்ப நிலை மாறும்; கடல் வற்றும். | 8 |

www.kalviexpress.in

| | பகுதி – 2 | 2+2+3+3=10 |
|---|---|---|
| 49 | **செய்யுள் வடிவில் விடை தருக.** | |
| | **திருக்குறள் (பெரியாரைத் துணைகோடல்)** | 2 |
| | அ) **இடிப்பாரை** இல்லாத ஏமரா மன்னன் | |
| | கெடுப்பார் இலானுங் கெடும். | 2 |
| | **திருக்குறள் (காலமறிதல்)** | |
| | ஆ) பகல்வெல்லும் கூகையைக் காக்கை, இகல்வெல்லும் | |
| | வேந்தர்க்கு வேண்டும் **பொழுது.** | 3 |
| | - **திருவள்ளுவர்** | |
| | **கம்பராமாயணம்** | |
| | இ) "**துன்புள தெனின்** அன்றோ சுகமுளது அதுவன்றிப் | |
| | பின்புள திடைமன்னும் பிரிவுளதென உன்னேல் | 3 |
| | முன்புளெம் ஒருநால்வேம் முடிவுள தென உன்னா | |
| | அன்புள இனிநாம்ஓர் ஐவர்கள் உளரானோம்". | |
| | - **கம்பர்.** | |
| | **பெரியபுராணப்பாடல்** | |
| | ஈ) **நல்லதாய்** தந்தைஏவ நானிது செயப்பெற் றேனென்று | |
| | ஒல்லையில் விரைந்து தோட்டத் துள்புக்குப் பெரியவாழை | |
| | மல்லலம் குருத்தை ஈரும் பொழுதினில் வாளராவொன்று | |
| | அல்லலுற் றழுங்கிச் சோர அங்கையில் தீண்டிற் றன்றே. | |
| | - **சேக்கிழார்** | |

www.kalviexpress.in


# ஸ்ரீ வித்யபாரதி மெட்ரிக் மேல்நிலைப்பள்ளி

**சக்கராம்பாளையம், அகரம்(அஞ்சல்), எலச்சிப்பாளையம்,**
**திருச்செங்கோடு(வட்டம்), நாமக்கல் (மாவட்டம்)-637 202.**
**அலைபேசி : 99655-31727, 94432-31727**

## தமிழ்த்துறை

**இரா.சபிதா.,எம்.ஏ.,டி.டி.எட்.,பி.எட்.,**
**தமிழாசிரியை. (அலைபேசி - 97906 91433)**


www.nammakalvi.org